நகல்

3.4.28. சு. நல்லசிவன் பிள்ளை.

நகல் -1



மதுரை.
3-4-28.

இதம்பெற நல்லுணர் வெய்திடக் கம்ப ரெழிற் றிருநாள்
விதம்பெறச் செய்து கொண்டாடிடுந் தூய வரதமதைப்
பதம்பெற மேற்கொண்ட வாத்தகபார்புகழ் பைந்தருநேர்
உதம்பர நாத முகில் வந்த திங்குன் றிருமுகமே.

சந்தப் பொதியத் தமிழ்முனி வன்றமிழ்ச் சொற்புதுக்கித்
தந்தது போற்
சங்கத் தமிழ்நூல் புதுக்கியவண்டந்தோன் கவினை
தடங்கடலாய்
வந்துத்தமதானப் பதியின் மன்னர் மதிக்க
வளர் பெரியோன்
மதுரைத் தமிழ்ச்சங்கத்திலுயர் மாண்பார் தலைமைப்
பெரும் புலவன்
சிந்தைக்கினிய செவிக்கினிய தெருட்டும் பெரும்பே
ராசிரியன்
றிசைநான் முகத்தோன் மரபின்வந்து திகழுஞ்சாமி
நாத முகில்
முந்தைத் தமிழ்நூலாய்வினையே முதன்மை வினையாக்
கடைப்பிடித்து
முதுநீருலகிற் றனது பெருமுதுமையானும்
முறை வருவான்.

நம்பனடியைக் கனவினுமெந் நாளுந் துதிக்கு
நன்னுவான்
நாடியடைந்தோ ரெவரேனு நலமே பெறச்செய்
திருவுளத்தன்
கம்பர் திருநாட் கவைத்தலைமை கருணையுடனேற்
றவண்போந்து
கற்றோருள்ளங் களிகூரக் கருமாமுகில்போற்
சொன்மழையை
யிம்பர்ப் பொழியுந் தமிழ்முகிலி னின்சொற் பொழிவு
செவிக்கேற்கும்
இனிய தவமிங் கில்லாமைக் கினைவன் வணக்கந்
தலைவர்திருச்
செம்பொற் றாட்குத் தெரிவித்தேன் றெரிவித்தருள்க
செகம்புகழுஞ்

நகல்



செய்ய கம்பரெழிற் றிரு நாள் சிறந்து வாழ்க
தினந்தினமே.

---

இங்ஙனம்,
சு. நல்லசிவன் பிள்ளை.
உபாத்தியாயர்,
மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை.
மதுரை.

நகல்

8

3 4 1928

ரூ
25

உ.வே.சா. ஐயரவர்கள்மேற்
பாடல்.
சு. நல்லசிவன்பிள்ளை.
மதுரை.
3-4-28.
௨ பக்.

(64)

(223 to 225)

Pages 223 - 225.
த.க. Vol 'K'
copied -